DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : C**C 209/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : திருமதி.இராமேஸ்வரி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 02.04.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 2nd **April** 2026.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் குற்ற ஆவணக்காப்பகத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.05.2013ம் தேதி 16.00 மணிக்கு சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் நான் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கவிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையகுற்ற எண்.47/2013 ச/பி. 498A, 294(b), 406, 506(1)இதச மற்றும் வரதட்சணை கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 4ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் அசல் மற்றும் புகார் மனுவை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியான ஆய்வாளர் மீனாள்

என்பவர் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் அனைத்தும் தவறானவை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியதுபோல புகார் மனு எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கு எதிராக முறையாக விசாரணை செய்யாமல் பொய்யாக வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**